பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆடி: 10 ஷஃபா: 19 இதழ்: 165
யாழ்ப்பாணம் புதன்கிழமை 26-7-78

## கூட்டணி ஊர்வலத்துக்கு தடை!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஊர்வலத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மகாநாடு இம் மாதம் 29ம், 30ம் திகதிகளில் ஆவரங்காலில் நடைபெறுகிறது.

நீர்வேலி சந்தியில் இருந்தும் இருபாலைச் சந்தியிலிருந்தும் மகாநாட்டு மைதானத்தை நோக்கி பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்த கூட்டணி திட்டமிட்டிருந்தது. இந்த ஊர்வலத்துக்கு யாழ் பொலிஸ் அனுமதி மறுத்திருந்தது. இதுசம்பந்தமாக கூட்டணி செயலதிபர் திரு. அ.அமிர்தலிங்கம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். சதிரவேலுப்பிள்ளை, திருமலை எம்.பி இராசம்பந்தன் ஆகியோர் நேற்று [illegible] திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்தித்து [illegible] தங்கள் நிலைமையை விளக்கினர். அரசியல் கட்சிகளின் ஊர்வலங்களுக்குப் பொதுவாகத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறதென்று கூறிய ஜனதிபதி, மேதின ஊர்வலத்துக்கு மட்டுமே அனுமதியுண்டென்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஊர்வலத்துக்கும் கூடத் தடையுண்டென்றும் விளக்கினர்.


# வேலைநிறுத்தம் வாபஸ்!

# பொலிஸ் சார்ஜன்ட்டுக்கு இடமாற்றம்

நேற்றிரவு இ. போ. ச. அதிகாரிகளுக்கும், பஸ் ஊழியர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து - ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழியைத் தொடர்ந்து - வேலைநிறுத்தத்தை பஸ் ஊழியர்கள் நேற்றிரவு கைவிட்டனர். சகல பஸ்சேவைகளும் இன்று காலை முதல் வழமைபோல் நடைபெறும்.

பஸ்ஊழியர்களின் நேற்றைய திடீர்வேலைநிறுத்தத்துக்குக் காரணமாகவிருந்த போக்குவரத்துப் பொலிஸ் சார்ஜன்ட் பாலசுப்பிரமணியம் இடமாற்றம் செயயப்பட்டுள்ளார்.

யாழ். பொலிஸ் அதிபர் திரு. ஈ. எகொடபிட்டியாவுடன் ''ஈழநாடு'' நேற்றிரவு தொடர்புகொண்டபோது; குறிப்பிட்ட பொலிஸ் சார்ஜண்ட்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டின்மீது விசாரணை நடைபெறுவதாகவும், விசாரணையைத் தொடர்ந்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.



பஸ் ஊழியர்களது வேலைநிறுத்தத்தின் எதிரொலி -- யாழ் பஸ்நிலையத்தில் பஸ்கள் ஓடாமல் நிற்பதையும் தனியார் வாகனங்களில் பிரயாணிகள் சிரமத்துடன் செல்வதையும்இங்குகாணலாம். படம்: பிரபாபோட்டோதேவா

# யாழ். பஸ் ஊழியர்கள் நேற்று

# திடீர் வேலை நிறுத்தம் செய்தனர்!

## சாரதியை சார்ஜன்ட் தாக்கியதன் எதிரொலி!!

(நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன்)

(யாழ்ப்பாணம்)

**பஸ்சாரதி ஒருவரை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொதுமக்கள் முன்னிலையில், காதைத் திருகிக் கன்னத்தில் அடித்தார் என்ற புகாரின்பேரில் நேற்று நண்பகல் 12 மணி முதல் யாழ்ப்பாணத்தில் சகல பஸ் ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். சம்பந்தப்பட்ட பொலிஸ்காரரை உடனடியாகத் தற்காலிகமாக வேலை நீக்கம்செய்யவேண்டும்என்ற கோரிக்கையை வைத்து இந்தவேலை நிறுத்தம்நடைபெற்றது.பஸ் ஊழியர்களுக்கு ஆதரவாகப் பிரயாணிகளும். மாணவர்களும்,இளைஞர்களும் நேற்றுப்பஸ்நிலையத்தில் பலத்த ஆர்ப்பாட்டம் செய்தனர்.**

நண்பகல் 12 மணி முதல் சகல பஸ்களும் பஸ்நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. பிற்பகல் 5 மணி வரை எவ்வித சமரச முடிவும் ஏற்படவில்லை.

### காலையில் நிகழ்ந்த சம்பவம்

யாழ். பஸ் நிலையத்திலிருந்து டிப்போவுக்குச் சென்ற பஸ் ஒன்று ஆரியகுளச்சந்திக் கருகில் காலை 11 மணியளவில் கார் ஒன்றுடன் விபத்தில் சிக்கியதாகவும், சிறிது நேரத்தில் அங்குவந்த போக்குவரத்து பொலிஸ் சார்ஜன்ட் பாலசுப்பிரமணியம் என்பவர் பஸ் சாரதியிடம் பஸ்ஸை வீதிக்கருகில் நிறுத்தும்படி கூறியபோது சாரதி கோபாலகிருஷ்ணன் தன்மீது பிழையில்லை யென்றும் பஸ்ஸை ஒரு அங்குலமும் நகர்த்தமாட்டேன் எனக் கூறியதாகவும் தெரியவருகிறது.

உடனே சார்ஜன்ட் பலர் முன்னிலையில் சாரதியின் காதில் பிடித்துத் திருகி அடித்ததாகவும், சாரதி உடனடியாக டிப்போவிற்குச் சென்று அறிவித்ததாகவும் தெரியவருகிறது.

பொலிஸார் பஸ்ஸில் வந்த இரு கண்டக்டர்களான செல்வராசா, ஜெயதேவன் ஆகியோரை பொலிஸ்நிலையம் வருமாறு கேட்டதாகவும், அவர்கள் அந்த நிலையில் வரமுடியாமல் இருப்பதாகக் கூறியதர்கவும் கூறப்படுகிறது. இதைத்தொடர்ந்து பொலிஸார் பஸ்நிலையம் வந்து மற்றொரு சாரதியை அழைத்துச் சென்று கண்டக்டர்களை இறக்கிவிட்டு பஸ்ஸை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றதாகவும் தெரியவருகிறது.

### வேலை நிறுத்தம் ஆரம்பம்

இதைத்தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு வேலைநிறுத்தம் ஆரம்பமானது. யாழ்ப்பாணம், காரைநகர், கிளிநொச்சி டிப்போவைச் சேர்ந்த பஸ்களும் ஓடவில்லை. முல்லைத்தீவு டிப்போவைச் சேர்ந்த சில டிப்போ பஸ்களும் ஓடவில்லை.

### பிரயாணிகள் தவிப்பு

பஸ்நிலையத்தில் நின்ற பிரயாணிகள் அல்லோலகல்லோலப்பட்டனர். தாங்கள் செல்லும் இடங்களுக்கு செல்லமுடியாமல் தவித்தனர்.

பஸ்நிலையத்தில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. மாணவர்களும் பஸ்நிலையத்தில் திரளத் தொடங்கினர்கள்.

யாழ். பஸ்நிலையத்திலுள்ள காரியாலயத்துக்கு முன் ஆயிரக்கணக்கானவர்கள் கோஷமிட்டபடி நின்றனர்,

### இ. போ. ச. தலைவர் பேச்சுவார்த்தை

வடபிராந்திய இ. போ. ச.

(6-ம் பக்கம் பார்க்க)

---

## வெள்ளத்தினல் 147 பேர் பலி!

புதுடில்லி, ஜூலை 25

வடஇந்திய மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பலியானோரின் தொகை 147 ஆக அதிகரித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

......

## ஆழ்கடல் சென்ற மீனவர் எங்கே?

(வெலிகம)

வெலிகம கடற்கரையில் இருந்து ஆழ்கடல்நோக்கிச் சென்ற மீனவர் நால்வர் வள்ளத்துடன் கடந்த 22ம் திகதியில் இருந்து காணமல் போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது. (உ)

......

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் இழுக்கப்பட்ட 672வது சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு

**34 E 0714**

ரூபா 1,00,000

இரண்டாம் பரிசு

**54 G 0411**

ரூபா 40,000

மூன்றும் பரிசு

**55 L 0427**

ரூபா 10,000

தலா ரூபா 1425-00 கொண்ட நூறுஆறுதல் பரிசுகள்வருமாறு:

| | |
|---|---|
| 03 A 0392 | 11 A 0570 |
| 43 A 0214 | 45 A 0319 |
| 41 B 0695 | 50 B 0390 |
| 04 C 0292 | 61 C 0629 |
| 58 C 0106 | 01 D 0161 |
| 08 D 0440 | 19 D 0973 |
| 33 D 0718 | 35 D 0467 |
| 45 D 0393 | 49 D 0940 |
| 59 D 0?24 | 16 E 0737 |
| 19 E 0163 | 25 E 0489 |
| 30 E 0615 | 40 E 0822 |
| 54 E 0615 | 13 F 0218 |
| 04 G0385 | 31 G 0183 |
| 13 H 6468 | 16 H 0357 |
| 22 H 0144 | 32 H 0006 |
| 32 H 0319 | 35 H 0264 |
| 34 J 0912 | 52 J 0076 |
| 54 J 0713 | 30 K 0291 |
| 06 L 0808 | 19 L 0740 |
| 44 L 0913 | 28 M 0696 |
| 32 M 0214 | 35 M 0224 |
| 34 M 0895 | 51 M 0105 |
| 52 M 0486 | 60 M 0039 |
| 06 N 0564 | 50 N 0510 |
| 57 N 0506 | 58 N 0147 |
| 02 O 0431 | 05 O 0190 |
| 06 O 0289 | 29 O 0359 |
| 41 O 0157 | 56 O 0798 |
| 01 P 0342 | 20 P 0423 |
| 22 P 0385 | 45 P 0019 |
| 58 P 0741 | 24 Q 0797 |
| 53 Q 0782 | 29 R 0767 |
| 58 R 0026 | 59 R 0355 |
| 45 S 0414 | 01 T 0145 |
| 02 T 0080 | 17 T 0021 |
| 21 T 0866 | 33 T 0785 |
| 40 T 0248 | 52 T 0697 |
| 57 T 0451 | 59 T 0552 |
| 36 U 0834 | 47 U 0179 |
| 47 V 0498 | 56 V 0121 |

(6ப் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம், கொட்டடி வைரவர் கோவிலுக்கு இருவேளை பூசைசெய்வதற்கு அந்தணர் தேவை. தகைமையுடன் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். வே. கந்தசாமி, 236, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 9879

யாழ்ப்பாண ரேயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர்கள் உடன் தேவை நேரில் வரவும். 9867

கண்டிக்குளிப் பகுதியில் ஒருவீடு அல்லது இரண்டு பரப்பு வீடு கட்டுவதற்குரிய காணி வாங்குவதற்கு தேவைப்படுகின்றது. ஆ. விவேகானந்தா 71, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 9891

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற பொலிகண்டி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வைரவிப்பிள்ளை காசிநாதன் என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில் - மரணமெய்தியவர் வி. காசிநாதன் கைம்பெண் வள்ளியம்மாள்,
126, 2-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல: ?/3383

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி.

**பொ. பாக்கியநாதன்**
(ஒப்பம்)
பதிவாளர்.

1978-ம் ஆண்டு ஆடி மாதம் 13-ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

C. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி,
யாழ்ப்பாணம். 9889

### தவறிவிட்டது

ஒரு கார் சில்லு பருத்தித்துறை ரேட்டில், முத்திரைச் சந்தைக்கும், பஸ் நிலையத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் சில்லை டாக்டர் சேனுதிராசா மின்சார நிலைய வீதியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 9893

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் இல. 32 ஸ்ரான்லி வீதியில் வசித்த காலம்சென்ற இரத்தினசிங்கம் குணராஜாவின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

இரத்தினசிங்கம் குணராஜா கைம்பெண் இராஜேஸ்வரி.
இல. 32, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்பகாரி.

மரணசாதன
நியாயாதிக்கம்
இலக்கம்: ரி-3374

மேலேயுள்ள இலக்கம் கொண்ட முதல்தத்துவவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறை உள்ளவரெவரேனும் 1978-ம் வருடம் ஆவணி மாதம் 11-ந் திகதி அன்று முற்பகல் 10-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருயதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 3-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

9842

## பூர்த்தி

(நெல்லியடி)

உடுப்பிட்டித்தொகுதியில் வேலைவங்கிப் படிவங்கள் வழங்கும் வேலைகளை தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு த. இராசலிங்கம் பூர்த்தி செய்துள்ளார்.

தமிழர்விடு தலைக்கூட்டணிக் கிளைகளின் சிபார்சின்படி வேலையற்ற இளைஞர்கள் யுவதிகளுக்குப் படிவங்கள் வழங்கப்பட்டன. குடும்ப நிலைமை, கல்வித்தகைமை, வயது என்பவற்றை ஆராய்ந்து கிளைகள் படிவம் பெற உரித்துடையோரை சிபார்சு செய்திருந்தது. (உ)

# "என்ன செய்வது? அவர்கள் எமக்கும் அடிக்கிருர்களே"

## குண்டர் பற்றி பொலிசார் கூறியதாக சாட்சியம்

(கண்டி)

"வீடுகளுக்குக் கல் வீசிக் கலாட்டா செய்த குண்டர்கள் பற்றி கடமையில் நின்ற பொலிசாரிடம் முறையிட்டேன். நாங்கள் என்ன செய்வது? அவர்கள் எங்களுக்கும் அடிக்கின்ருர்கள் என்று அவர்கள் கூறினர்.'

இவ்வாறு சன்சோனிக் கமிஷன் விசாரணையில் வத்துகாமம் வியாபாரியான பி. மூக்கப்பிள்ளை நடேசபிள்ளை என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: "எனது கடையை உடைத்தவர்களை எனக்குத் தெரியும். ஆனல் அவர்கள் பெயர்களை கமிஷன்முன் வெளியிட பயமாயிருக்கிறது. பொலிஸில் பெயர்களைக் கூறியிருக்கிறேன்

எனது வீட்டுக்கும் ஏனையோர் வீடுகளுக்கும் ஒரு கூட்டத்தினர் வந்தனர். அவர்கள் வீடுகளுக்குக் கல்லெறிந்தனர். நான் சந்தியில் கடமையிலிருந்த பொலிசாரிடம் முறையிட்டேன். பொலிசார் அக் கூட்டத்தினரை எச்சரித்தனர். ஆனல் அக் கூட்டத்தினர் பொலிசாரை நோக்கி விசிலடித்து 'ஊ' கூச்சல் போட்டனர்.

ஆகஸ்ட் 19-ம் திகதி பொலிசார் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதாக அறிவித்தனர். மாலையில் பொலிஸுக்குப் பின்னல் உள்ள சிங்கள மகாவித்தியாலயத்தில் 150 - 200 பேர் கூடியிருந்தனர். அவர்கள் விசிலடித்தனர். பின்னர் ஓடிவந்தார்கள்.

அவர்கள் எனது வீட்டுக்கும் ஏனைய வீடுகளுக்கும் கல் வீசினர். இதுபற்றி பொலிசாரிடம் முறையிட்டபோது கூட்டத்தினர் பொலிசாருக்கு விசிலடித்து 'ஊ' போட்டனர்.

"நாங்கள் என்ன செய்வது? அவர்கள் எங்களுக்கும் அடிக்கிருர்கள்" என்று பொலிசார் கூறினர்,

எனக்கு 52,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது. இதுவரை வழக்கு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. நாம் இப்போதும் பயத்துடனேயே வாழ்ந்து வருகிருேம். எமக்கு தகுந்த பாதுகாப்புத் தரவேண்டும்" என்ருர். (உ)

## வருடாந்த பொதுக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பெற்ருர்-ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 28ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவரும், கல்லூரி அதிபருமான திருமதி க. ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெறவுள்ளது. (உ)

## அறிவித்தல்

வட-இலங்கைச் சங்கீதசபை - யாழ்ப்பாணம்

**1978ஆம் ஆண்டு கர்நாடகசங்கீதப் பரீட்சைகள்**

1. விண்ணப்பங்கள் 15-9-1978வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
2. பிந்திய விண்ணப்பங்கள்: அதற்குரிய கட்டணப் பணத்துடன் ரூபா 5/- மேலதிகமாகக் கட்டிய வங்கிப் பற்றுச்சீட்டுடன் 30-9-1978 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
3. செயன்முறைப் பரீட்சை: 1978ஆம் ஆண்டு மார்கழி இறுதி வாரத்தில் தொடங்கி நடைபெறும்.
4. சாத்திரப் பரீட்சை: செயன்முறைப்பரீட்சை முடிந்ததும் ஒரு சனி வாரத்தில்நடைபெறும்.
5. பரீட்சை விதிகளுக்கமையத் தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களுக்கும் மற்றைய ஏனைய விபரங்களுக்கும்

தலைவர்
வடஇலங்கைச் சங்கீத சபை,
வித்தியாபகுதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு முத்திரை ஒட்டி விலாசமிடப்பெற்ற தபால் உறை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். நேரில் பெறவிரும்புகிறவர்கள் சங்கீத ஆசிரியரின் கடிதம் கொண்டுவரல்வேண்டும்.

திெ. மாணிக்கவாசகர்.
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்,
வடபிரதேச கல்விப்பணிப்பாளரும்.

தொடர்பு இல. E/E
வட இலங்கைச்
சங்கீத சபை அலுவலகம்.
வித்தியாபகுதி,
யாழ்ப்பாணம். 25-7-1978.
9892

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கனகரத்தினம் நரேந்திரன், வட்டுக்கோட்டை.
வழக்காளி

இல. ஈடு/14819

எதிராக
1. சண்முகம் சின்னராசாவும் பெண்
2. அன்னலட்சுமியும், அம்மன்ரேட்டு, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/14819-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு ஆவணி மாதம் 2-ந் திகதி புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 4080-00ம் 21-4-75 தொடக்கம் 5-10-76 வரைக்கும் ரூபா 3000/-க்கு 18 வீத வட்டியும் அதன் பின் மூழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 513-60 சதம் விற்பனவுச் செலவால் ரூபா 100/- கழித்து முத்திரைச் செலவு ரூபா 9/- கூட்ட வேண்டும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை: குலத்துங்க முதலியார் வளவும் மறுபிரிவுகளும் நில. பர. 4·12யில் வடக்குப் பக்கமாக நில. பர. 12 நீக்கி மிகுதி நில. பர. 4 ஆனல் அளவைக்காரன் ரி. கந்தையா 25-12-1967ல் 3376-ம் இலக்கத்தில் அளந்து விபரித்த படத்தின்படி நில. பர. 3 குளி 9 இதற்கு எல்லை கிழக்கு சபாபதி செல்லத்துரை பெண் வள்ளிக்கொடியினுதனம், வடக்கு வைத்திலிங்கம் சிவனடியானினுதனமும், ஒழுங்கை முகப்பும் மேற்கு யோகராசா பெண் ஜெயமணியினுதனமும், சுப்பிரமணியம் கந்தையாவினுதனமும், தெற்கு தம்பையா நாகமுத்துவினுதனமும் இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

**நீ. அன்ரனிப்பிள்ளை,**
விற்பனவு ஆணையாளர்.

22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். 9888

## 35 கல்விகற்ற இளைஞர்கட்கு வேலை வாய்ப்பு

குருநகர் இளைஞர் மீன்பிடி அபிவிருத்தித் திட்டத்தில் வேலை வாய்ப்பு அளிக்குமுகமாக 17½ அடி தும்புக்கண்ணுடி வள்ளம், வெளியிணைப்பு இயந்திரத்துடன் மீன்பிடி உபகரணங்களும் வழங்கப்படும்.

கடற்ருெழிலாளரின் பிள்ளைகளும், வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவங்களை 10-8-78க்கு முன்பாக வண. F. J. ஸ்ரனிஸ்லோஸ் 79, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

9890

## அறிவித்தல்

வீ. ரீ. ஆர். சிங்கம்ஸ் பங்காளிகளில் ஒருவராகிய வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் என்பவர் 23-7-78ல் தனது பதவியை இராஜினுமா செய்துள்ளார். இன்று தொடக்கம் அவர் ஸ்தாபனத்தின் பெயரில் செய்யும் ஒப்பந்தங்கள் யாவற்றிற்கும் நாங்கள் பொறுப்பு ஏற்கமாட்டோம் என்பதைப் பொதுமக்கள்யாவர்க்கும் அறிவிக்கிருேம்.

**வீ. ரீ. ஆர். சிங்கம்ஸ்,**
நம்: 7, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.
9887

ஈழநாடு
The Eelanaadu

## கப்பல் சேவை

மேற்கு ஆசியத் துறை முகங்களுக்குப் பொருள்களை ஏற்றிச் சென்ற 'லங்கா சாந்தி' கப்பல், வெறுங் கப்பலாகத் திரும்பிவருகின்றது.

ஜூன் பத்தாம் தேதி இங்கிருந்து புறப்பட்டுச் சென்ற 'லங்கா சாந்தி' கப்பல் ஆகஸ்ட் எட்டாம்தேதி மீண்டும் இங்குவந்துசேரும்.

கப்பல் திரும்பிவரும் பொழுது பொருள்களை ஏற்றிவருவதற்கான முன்னேற்பாடுகளைக் கப்பல் கூட்டுத்தாபனம் செய்யத் தவறியதனுலேயே கப்பல் வெறுமனே திரும்பவேண்டியுள்ளது.

கப்பல் ஊழியர்களின் வேதனம் உட்பட ஏனைய கப்பல் செலவினங்களுக்காக நாளாந்தம் ஆயிரத்து ஐநூறு டாலர்கள் செலவிடப்படுகின்றன.

திரும்பும் வழியில் சரக்குகளை ஏற்றிவராததால் கூட்டுத்தாபனத்துக்குப் பெரும் நட்டம் ஏற்படவுள்ளதாம். கூட்டுத்தாபனத்துக்கு நட்டம் என்றுல் அது நாட்டுக்கு ஏற்படும் நட்டம் தான்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம், செத்தல் மிளகாய் ஏற்றிக்கொண்டு கொழும்புக்குச் செல்லும் லொறிகள் அங்கிருந்து பல பொருள்களை ஏற்றிக் கொண்டுதான் யாழ்ப்பாணம் திரும்பிவருகின்றன. சில சமயங்களில் யாழ்ப்பாணத்துக்குச் சில பொருள்களை உடனடியாக அனுப்பி வைக்க முடியாதபடி லொறிகளுக்குத் தட்டுப்பாடுகூட ஏற்படுவதுண்டு. அந்தஅளவுக்கு அங்கிருந்து பொருள்களை ஏற்றிவருவதற்கு லொறிச் சொந்தக்காரர்கள் முன்னதாகவே ஏற்பாடு செய்துவருகின்றனர்.

வாடகைக்குக் கார்பிடித்து ஓர் இடத்துக்குப் போய்ச் சேரவேண்டிய அவசியம் ஏற்படும்போது அவர்களைக் கொண்டுபோய் இறக்கிவிட்டுத் திரும்பிவரும் தூரத்துக்கும் சேர்த்தே கார்ச்சாரதி கட்டணம் பேசுகிருர். ஆனல் ஆட்களைக் கொண்டு போய் இறக்கவேண்டிய இடத்தில் இறக்கிவிட்டு கார் வெறுமனே திரும்பி வருவதில்லை. எப்படியோ ஆட்களைத்தேடி ஏற்றிக் கொண்டுதான் அது திரும்பும்.

பொருள்களை ஏற்றிக் கொண்டுபோய் இறக்கும் லொறி வெறுமனே திரும்பினுலும் ஆட்களை ஏற்றிச் சென்றுஇறக்கிவிடும். வாடகைக்கார் சும்மா திரும்பினுலும் வீண் நட்டம் என்பது லொறிச் சொந்தக்காரர்களுக்கும் வாடகைக் கார்ச் சாரதிக்கும் நன்கு தெரியும்.

இந்தச்சின்ன விஷயம் கூடக் கப்பல் கூட்டுத்தாபனத்துக்குத் தெரியவில்லையெனில் கூட்டுத்தாபனத்திற்காகச் செலவிடும் பணம் விழலுக்கு இறைத்த நீராகும்!

பொருள்களை ஏற்றிச் சென்ற 'லங்கா சாந்தி' திரும்பிவரும் பொழுது பொருள்களை ஏற்றிவருவதற்கு முன்னேற்பாடாகஏற்பாடு செய்யப்படவில்லையெனில் அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்துத் தண்டனையளிக்கப்படுவதுடன் எந்தக் கூட்டுத்தாபனத்திலும் அவர்களுக்கு இனி இடமளிக்கக்கூடாது.

'செட்டி நட்டம் ஊர் மேலே' என்று ஒரு பழமொழி உண்டு. கப்பல் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் நட்டமும் பொதுமக்களின் தலையில் தான் விழும். எனவே இதுபோன்ற தவறுகள் இனி எந்தக் கூட்டுத்தாபனத்திலும் அரச திணைக்களங்களிலும் ஏற்படாதவாறு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியம்.

# பாரதத்தில் பன்னிரு நாட்கள்

**செந்தமிழர் இயக்கத்தின் ஸ்தாபகரான திரு. வி. பொன்னம்பலம் உலக நாடுகள் பல கண்டவர். அண்டை நாடான இந்தியா மீது இளமையில் ஆராதபற்றுக் கொண்ட வி. பி. தமது உயர் கல்வியை இந்தியாவிலேயே பெற்றவர். இந்தியாவில் அநேக காலம் வாழ்ந்தவர். தமது பொதுத் தொண்டினை அங்கேயே ஆரம்பித்தவர். அண்மையில் இந்தியா சென்று திரும்பிய அவர் இன்று தாம்காணும் இந்தியாவை இங்கு படம்பிடித்துக் காட்டுகிருர்.**

வி. பி. யின் இந்திய பயண அனுபவங்களை

கேட்டு எழுதியவர்:

இணுவை. ந. சண்முகப்பிரபு

**வி. பி.** என்று இரண்டெழுத்தால் எங்கும் அறியப்பட்ட திரு. வி. பொன்னம் செந்தமிழர் இயக்கத்தின் தந்தை ஆவார். அன்னரின் திறமைகள் பரந்த நோக்கு முற்போக்குச் சிந்தனைகள் பற்றி அவருக்கு எதிரணியில் நிற்பவர்கள் கூடப் புகழ்ந்து பாராட்டுவதைக் காண்கின்ருேம்,

செந்தமிழர் இயக்கத்தை அமைத்தபின் முதற்தடவையாக திரு. பொன்னம்பலம் அண்மையில் இந்தியா சென்று திரும்பியது தெரிந்ததே.

இந்தியாவுக்கு அவர் சென்றது இதுதான் முதற்தடவையல்ல. பல தடவைகள் சென்றவர் அவர். இந்தியாவிலேயே தமது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டவர்.

அன்று இந்தியாவை முழுமையாக ரசித்து, தம்இளமை பருவத்தைப் பல பொது சேவைகளில் கழித்த திரு. வி. பி. முப்பது வருடங்களின் பின் இடையே பல தடவைகள் சென்றவரெனினும், இன்றைய இந்தியாவின் வளர்ச்சி மாற்றம் போக்கு என்பன குறித்துத் தமது தற்போதைய இந்திய பயணத்தில் தான் ஒப்பிட்டு நன்கு உணரக் கூடியதாக இருந்ததை விரிவாக எடுத்துரைத்தார். அந்த எண்ணங்கள், கருத்துக்கள் ரசனைகள் தான், 'பாரதத்தில் பன்னிரு நாட்கள்'.

**அ**ந்த 'ஏயர் சிலோன்' விமானம் தன் இறக்கைகளை விரித்து பறவையைப் போல வானிடையே எழுந்து கொண்டிருந்தது. ஒரு பொதுவுடைமை சிந்தனையாளனையும் சுமந்து செல்வதை அது அறியாமல் வழமை போல் வானில் எழுந்து சீராகப் பறக்கத் தொடங்கிய விமானம் வானின் முகில்களையும், தென்றல் இளவேனிலையும் கிழித்துக் கொண்டு ஈழத்தின் தீந்தமிழ் பாயும் யாழ். நகரின் வண்ண எழில்களை ரசித்துச் செல்வது போல அமைதியாகக் கடலினைத் தாண்டியது. அப்போது தமது பழைய அனுபவங்கள் வி. பி.யின் நெஞ்சில் நிழலாடத் தொடங்கின. வானிடையே விமானம் பறப்பதுபோல, பழைய நினைவுகளிடையே அவரது உள்ளம் பறக்கத் தொடங்கியது.

**அ**ப்போது அவர் சிறுவனுகப் படித்துக் கொண்டிருந்த காலம். இப்போதைய வடமாநில வித்தியாதிபதி திரு. மாணிக்கவாசகர் அடுத்த வகுப்பில் கலைப்பிரிவு மாணவர்க்கு பாரத தேசத்தைப் பற்றி விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார். இந்திய நாட்டின் ஆத்மீகம், தேச பக்தி பற்றி அவர் கூறிய கருத்துக்கள் தான் வி. பி.யின் உள்ளத்தில் பதிந்தனவேதவிர அவர் படித்த விஞ்ஞான பாடம் மனதில் ஏறவில்லை. அந்தக் கவர்ச்சி, விஞ்ஞானம் படித்த இவரைக் கலைப்பிரிவுக்கு மாற்றியது. இந்தியாவுக்குச் செல்ல வேண்டும், தொடர்புகள் இந்தியாவுடன் கொள்ள வேண்டும், அங்குள்ள அறிஞர்களைக் காண வேண்டும், பழகவேண்டும் என்றெல்லாம் அந்த இளம் வி. பி. திட்டம் போட்டார். விளைவு...?

### இந்தியாவில் சமூக சேவை

1948-ல் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் தமது பதினெட்டாவது வயதில் உயர் கல்வி பயிலக் கடல்கடந்து இந்தியா பயணமானுர், தமது மாணவப் பருவத்தில் சென்னை கிறிஸ்தவக் கல்லூரி விடுதியில் ஓய்வு நேரத்தில் ஏனைய பல மாணவர்கள் கேளிக்கைகளிலும், சினிமா பார்ப்பதிலும் தம் பொழுதைப் போக்கிய போது வி. பி.யும் இன்னும் பல மாணவர்களும் 'சமூக சேவைக் கழகம்' என்னும் ஒரு கழகத்தில் சேர்ந்து பழைய தாம்பரம் சேரிப் பகுதியில் சேரிமக்களுக்குச் சேவை புரிநது தொண்டாற்றுவதில் முழுமூச்சாக ஈடுபட்டனர். அக்கழகத்தில் சாதாரண அங்கத்தவராகச் சேர்ந்தவர் தமது திறமை, சேவை சீரிய எண்ணம், சகலரிடமும் பழகும் நற்பண்பு இவற்ருல் படிப்படியாக உயர்ந்து இறுதியில் வி. பி. யே அக் கழகத்தின் தலைவரானுர். சேரி மக்களது பிள்ளைகளை அழைத்துச் சென்று தம் கையாலே 'சிகையலங்காரம்'

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

முடியாததையும் செய்ய, முடியும்படி செய்யக் கூடியது தெய்வ நம்பிக்கைதான்.

...சுவாமி சிவானந்தர்

## பதியார்ந்த முனீஸ்வரனே பவனிவாராய்

பெருமகழி மருவுமதிற் பேரார் கோட்டை
பின்னிருக்க முற்றவெளி முன்னே நின்று
கருணைமழைக் காட்சிநிறை கனியப் பாவே
கவினுர்ந்த யாழ்நகரத் தனியப் பாவே!
திருமுழுக்கு இதமூட்டும் அன்பர் கட்குத்
திடமார்ந்த திருகாட்டும் முனியப் பாவே!
அருளுவக்க அலங்கார மஞ்சந் தன்னில்
அழகார்ந்த வீதிவலம் வாராய் நேரே!

மதவெறியர் வன்மனத்தை மாறச் செய்த
மாதவனே யாழகத்தார் மதிக்கும் பொன்னே!
இதழுயர்ந்த கோபுரமார் இசைவே பெற்ற
எழிலார்ந்த கோயிலிலே எழுந்த மன்னே!
நிதமுயர்ந்த பூசையினுல் நிறைந்த நேரார்
ந்த்தியனே சக்தியனே நெஞ்சக் கண்ணே!
பதம்பரவிப் பணிகின்ருேம் பழைய கோட்டைப்
பதியார்ந்த முனீஸ்வரனே பவனி வாராய்!

வருடமுழுக் கிருபத்து ஒன்றும் மேலும்,
வளர்முக்கு எத்தனையோ வகையும் சேர்ந்து
திருமுழுக்குப் பொலிவார்ந்த முனியப் பாவே!
தேன்முழுக்குச் செய்திடுவேன் தினம்பா வாலே,
மருளகற்றி மதியேற்றி மனிதன் என்னும்
மாட்சிமைசேர் ஞானநெறி மலர்ந்து ஓங்க
அருளுவப்பாய்! அன்புவப்பனே அடியன் யானே
அனவரதம் உனைத்துதிப்பேன் அகம்பூ ரித்தே!

--- அரியாலையூர் வே. ஐயாத்துரை

**(யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் கோவில் மணவாளக்கோல சங்காபிஷேக விழா இன்று நடைபெறுகிறது. இவ்விழா கடந்த 6-ந் திகதி ஆரம்பமானது.**

**இன்றிரவு முனீஸ்வரப் பெருமான் நவரதத்தில் திருவீதிவலம் வருவார்.)**

## நாடும் நடப்பும்

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீண்டாமைப் பிரச்னை" என்ற தலைப்பில் ஆவரங்கால் வடக்கைச் சேர்ந்த திரு. சி. கிருஷ்ணபிள்ளை என்பவர் தமிழ்இளைஞர்பேரவைச் செயலாளருக்கு எழுதியுள்ளநீண்டதொரு கடிதத்தின் பிரதியொன்றை எமக்கு அனுப்பிவைத்திருக்கிருர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் சாதி, சமூக அடிப்படையிலான தீண்டாமைப் பிரச்னைகளை விளக்கமாக அவர் இதில் எடுத்துக் காட்டியிருக்கிருர்

கடிதத்தின் இறுதிப்பகுதியில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களில் சிலவற்றை இங்கு தருகிறேன்.

"அரசியல் துறையைப் பொறுத்தவரையில் கடந்த பொதுத்தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் போட்டியிட்டு வெற்றியீட்டியது தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் ஆகியஇரண்டும் இணைந்துதமிழர்விடுதலைக் கூட்டணி நிறுவியதன் மூலம் கிடைத்த உண்மையானபெறுபேருகும். எதிர்காலத்தில் விதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் இவர்களுக்குரிய பிரதிநிதித்துவ எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமெனஎதிர்பார்க்கலாம். புதிய தேர்தல் சட்டவிதிகளின் கீழ் விரைவில் நடைபெறவிருக்கும் உள்ளூராதிகார சபைகள் பொதுத்தேர்தலில் அவர்களது விதாசாரத்துக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்.

இனவிடுதலைக்கு முன்னர் தீண்டாமைப்பிரச்னைக்குதீர்வு காணப்படவேண்டும் என்ற நியாயபூர்வமான கோரிக்கையை தமிழ் ஈழம் வேண்டி நிற்கும் நாம் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்தித்தால் இப் பிரச்னை எப்போதோ தீர்ந்திருக்கும். இது சம்பந்தமாக முன்னுள் வவனியா எம். பி. திரு. சி. சுந்தரலிங்கம் தமிழ் அரசுக்கட்சியின் ஆரம்பகாலத்தில் வெளியிட்டகருத்து நன்கு கவனிக்கத்தக்கது.

"தமிழ்மக்களுள்ளே ஒரு பகுதி மக்கள் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்பட்டிருக்கும் வரை, விசேஷமாக யாழ்ப்பாணத்திலே தீண்டாமைக்குச் சிரஞ்சீவி ஆயுள் கொடுக்கப்பட்டிருக்கும்வரை தமிழர்களுக்கு என ஒரு தனியரசு, தமிழரசு, சமஷ்டி கோருவது அசாத்தியமாகும்".

கடந்த பொதுத்தேர்தலின் மூலம் பகிரங்க தீர்ப்பளித்து இழந்த தமிழ்ஈழத்தின் விரசுதந்திரத்துக்காகக் காத்திருக்கும் தமிழ்ப்பெருங்குடி மக்கள் மனம்வைத்து முழுமனதுடன் திவிரமாக ஒத்துழைத்தால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் தீண்டாமைப்பிரச்னை மிகச்சுலபமாகத் தீர்ந்துவிடும்.

-- ஊர்சுற்றி

## உடுப்பிட்டியில் சிவாவுக்கு வரவேற்பு

(நெல்லியடி)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட நல்லூர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு மு. சிவசிதம்பரத்திற்கு உடுப்பிட்டித் தொகுதி மக்கள் பெரும் வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்துவருகின்ருர்கள். ஆகஸ்ட் 12-ந் திகதி இவ்வரவேற்பு விழா நடைபெறும்.

கரவை தச்சந்தோப்பு விநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலம் நடைபெறும். இவ்வரவேற்பு விழா முன்னைநாள் ஞானசாரியார் கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவப்பிரகாசம் தலைமையில் நெல்லியடி கட்டைவேலியில் நடைபெறும்

(உ)

# பூட்டோவின் தேர்தல் மோசடித் திட்டம் இராணுவ அரசு அம்பலப்படுத்தியுள்ளது

## 405 பக்கங்களில் வெள்ளை அறிக்கை

இஸ்லாமாபாத், ஜூலை 25

**பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோ 1977ம் ஆண்டுத் தேர்தலில் தமது மக்கள்கட்சி வெற்றிபெறுவதற்காக செய்த மோசடிகள் குறித்து இராணுவ அரசு வெள்ளைஅறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.**

**77ம் ஆண்டு மார்ச் தேர்தலில் தமது கட்சி வெற்றிபெறுவதற்கான மோசடித்திட்டம் ஒன்றை ஜனாப் பூட்டோ ஓராண்டுக்குமுன் 1976ம் ஆண்டே தயாரித்தார் என்று அந்த வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

405 பக்கங்களைக் கொண்ட இந்த வெள்ளை அறிக்கையில் ஆயிரத்துக்கு மதிகமான 'போட்டோ ஸ்டட்' பிரதிகளும் பிரசுரமாகியுள்ளன.

பாகிஸ்தான் முன்னாள் பிரதம நீதியரசரும் தற்போது ஜனாப்பூட்டோவுக்கு எதிரான கொலைக்குற்றச்சாட்டு வழக்கில் பூட்டோ சார்பில் ஆஜராகி வாதாடிய வழக்கறிஞருமான ஜனாப் யாகியா பாக்கீர் தேர்தலில் போட்டியிட்ட தொகுதியில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் ஊழல் நடவடிக்கைகளுக்கு இந்த அறிக்கையில் முக்கியத்துவம்கொடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நிர்வாகத்தையே பூட்டோ தமது தேர்தல் வெற்றிக்கு முற்றாகப் பயன்படுத்தினாரென்றும்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல அரசாங்க அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும்லஞ்சம் வழங்கியமை, விமானப்படை விமானங்களை பிரச்சாரப் பணிகளுக்குப் பயன்படுத்தியமை ஆகியவையும் அம்மோசடித்திட்டத்தில் அடங்கியிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

## மகாகும்பாபிஷேக பூர்த்திவிழா

(யாழ்ப்பாணம்)

சோழ அரசிளங்குமாரிமாருதப்புரவீகவல்லியில் சகாப்தத்தோடு தொடர்புடைய சண்டிலிப்பாய் ஆலங்குளாய்ப்பதி பிள்ளையாருக்கும் முருகமூர்த்திக்கும் மகாகும்பாபிஷேக பூர்த்தியாகநாளைபுதன்கிழமை நண்பகல் மகாசங்காபிஷேகமும் அன்னதானமும் உற்சவமும் நடைபெறுகின்றன.

## இலங்கை இந்திய பேச்சுக்கள் இன்று ஆரம்பம்

புதுடில்லி, ஜூலை, 25

இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகளின் குடியுரிமை பற்றிய இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நாளை புதன்கிழமை புதுடில்லியில் இரு நாட்டு அதிகாரிகளுக்குமிடையே ஆரம்பமாகின்றன.

நான்கு நாட்கள் நடைபெறும் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவுக்கு வெளிநாட்டு அமைச்சின்செயலாளர் திரு. ஜெயசிங்கா தலைமை வகிப்பார். (இ)

## "ஹிந்தி திணிப்பு ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து"

புதுடில்லி, ஜூலை. 25

இந்தியாவில் ஹிந்திமொழி பேசாத மாநிலங்களில் மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் தொடர்புமொழியாக இருக்க வேண்டுமென்று கர்நாடக முதல்வர் திரு.தேவராஜ் அர்ஸ் தெரிவித்துள்ளார்.

ஹிந்திமொழிபேசாதமக்கள் வாழும் மாநிலங்களில் ஹிந்தி திணிக்கப்பட்டால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுமென்றும் திரு. அர்ஸ் பங்களூரில் தெரிவித்தார். (இ)

## தேசாயைச் சந்திக்கும் நோக்கம் கிடையாது

### சரண்சிங் கருத்து

புதுடில்லி, ஜூலை. 25

பிரதமர் திரு. தேசாயைச் சந்திக்கும் நோக்கம் தற்போது தமக்குக்கிடையாது என்று இந்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் நிருபர்களிடையே தெரிவித்துள்ளார்.

இப்போது லஞ்சம் நாட்டில் வெகுவாக தலைதூக்கியுள்ளது. இந்நிலையில் ஜனதாகட்சியால் எதுவும் செய்துவிடமுடியாது என்றும் திரு. சரண்சிங் கூறினார். (இ)

### மகாராஷ்டிரத்தில்காங்கிரஸ்

## கூட்டுமுன்னணி அமைக்கும் முயற்சி நடைபெறவில்லை

### ஸி. சுப்பிரமணியம் கருத்து

பம்பாய், ஜூலை, 25

மகாராஷ்டிர மாநிலத்தில் உத்தியோகபூர்வ காங்கிரஸ்-இந்திராகாங்கிரஸ் கூட்டணி அமைக்கும் முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமானதிரு.ஸி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி குறித்து ராயகாங்கிரஸ் காரியக்கமிட்டியின் உத்தரவின் பேரில் பம்பாய் சென்றுள்ள திரு. சுப்பிரமணியம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் உத்தியோகபூர்வ காங்கிரஸ்கட்சி மகாராஷ்டிரசட்டசபையில் சுயேச்சையான எதிர்க்கட்சியாக இயங்கும் என்றும் கூறினார்.

இதேவேளையில் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட மகாராஷ்டிர முதல்வர் திரு. ஷரத்பவாரும் அவரது 34 ஆதரவாளர்களும் தமக்கு 4 மாதம்அவகாசம்தரும்படியும் அதற்குள் தாம் செய்ததை சரியென தம்மால் நிரூபிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (இ)

## விவசாய அறிவுப்போட்டி முடிவுகள்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதி இளம் விவசாயிகள் கழகங்களின் விவசாயிகள் விழாவும் பொருட்காட்சியும் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது இடம்பெற்ற வானொலி விவசாய அறிவுப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரம் பின்வருமாறு;

முதலாம் இடம்! சீ. யசோதரன் (பண்டத்தரிப்பு இளம் விவசாயிகள் கழகம்).

இரண்டாம்இடம்: ஆ. குணவதி, (பண்ணாகம் இளம் விவசாயிகள் கழகம்), மூன்றாம் இடம்: எஸ். பொன்விழி (பண்ணாகம் இளம் விவசாயிகள் கழகம்).

இப்போட்டியை கமத்தொழில் திணைக்கள தகவல் பிரிவைச் சேர்ந்த திரு. எஸ். அரசரத்தினம் நடாத்தினார் பார்வையாளர்களிடையேயும் விவசாய அறிவுப் போட்டி நடாத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. (உ)

## சிரமதானம்

(சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கு நெடுங்குளத்தைச்சிரமதானம் மூலம் ஆழமாக்கும் வேலை சுழிபுரம் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டன. சுமார் நூற்றுக்கு மேற்பட்ட தொண்டர்கள் இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர். வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. தா திருநாவுக்கரசு சிரமதான வேலையை ஆரம்பித்து வைத்தார். (உ)

'களம்பலகண்டகாளை'

## அஞ்சாமை படைத்த அமிர்தலிங்கம்

### இன்று நூல் வெளியீடு



ஈழத் தமிழர்களின் தன்னிகரில்லாத் தலைவனாக எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பவர் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள். அவருடைய வாழ்க்கை தமிழினத்தின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டது. இலங்கைத் தமிழர்களின் வரலாற்றை எழுதத் தொடங்கினால் அமிருடைய வரலாறும் அதனோடு கலந்து வரலாற்றாசிரியனுக்கே தெரியாமல் இணைந்துவிடும். இந்த அளவுக்கு இலங்கைத் தமிழர் வரலாறும் தலைவர் அமிர்தலிங்கத்தின் வரலாறும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாகும்.

அகில உலக அரசியல் வானிலே அவதானிக்கப்படும் நட்சத்திரமாக நடமாடிவருகின்றவர் தலைவர் அமிர் என்றால் அதில் மிகை இருக்காது. இத்தகைய தலைவரைப்பற்றிய வாழ்க்கை வரலாறு மிகவும் அவசியம் என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்.

தலைவர் அமிருடைய வரலாற்றை நயம்பட எழுதி தமிழகத்திற்குத் தந்திருக்கிறார் நாக. சாந்தலிங்கம் என்ற இளைஞர். இளைஞர் எழுதியுள்ள இவ்வரலாற்று நூலிலே பல செய்திகள் காணக்கிடக்கின்றன. தனி மனிதனின் வரலாற்றில் இனத்தின் வரலாறும் தமிழ்த் தொண்டர்களின் வரலாறும் கூடிக் கலந்து பேசப்படுவது படிப்போருக்கு மகிழ்வைத் தரக்கூடியது.

இன்றைய காலகட்டத்தில் எம்மினத்திற்கு வேண்டப்படும் சகல குணங்களும் ஒன்றுயமைந்த தலைவரின் வரலாற்றை நூல் உருவில் நாம் பெற்றுக்கொள்வது பெரும் பேறென்றே சொல்லவேண்டும். தலைவரைப் பெற்றதும் பெரும் பாக்கியமாகக் கருதப்படும் இவ்வேளையில் அவருடைய வரலாறுவருவதும் வரவேற்கப்படவேண்டியதொன்றல்லவா?

### அஞ்சாமை

எழுபத்தி நான்காம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை அமிர் ஏற்றபோது தந்தை செல்வநாயகம் கூறிய உரைகள் இன்று ஞாபகத்திற்கு வராமலாபோகும்?

''தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று இப்போது அதைக் கொண்டு நடத்தும் திரு. அமிர்தலிங்கத்திடம் நான் காணும் முக்கிய சிறப்பியல்பு அவருடைய அஞ்சாமையாகும். மிகப் பலம்வாய்ந்த எமது எதிரியாகிய இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து நாம் போராடுவதற்கு அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களே வேண்டும். அமிர்தலிங்கத்திடம் பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. தமிழிலும், ஆங்கிலத்திலும் அவர் திறமையாகப் பேசும் ஆற்றல் படைத்தவர். தலைவர் ஒருவனுக்கு வேண்டிய குணங்கள் அவருக்கு உண்டு. ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்குப் போராடுவதற்கு அவருக்குப் போதிய காலம் இருக்கின்றது. வயதைப் பொறுத்தவரையில் அவரை ஒரு இளைஞர் என்றே சொல்ல வேண்டும்! என்று அன்று தந்தை செல்வா குறிப்பிட்டது தீர்க்கதரிசனமாய் அமைந்துவிட்டது.

இன்று தமிழ்த் தலைவராக நிமிர்ந்து நிற்கும் அமிருடைய சரித்திரம் ''களம் பல கண்ட காளை தளபதி அமிர்தலிங்கம் என்ற பெயருடன் வெளிவருகிறது. நூலாசிரியர் நாக. சாந்தலிங்கம் குறிப்பிடுவது போல ''சுவரொட்டி ஒட்டும் சாதாரணத் தொண்டனாக அரசியல் களத்தில் குதித்து மேடைப் பேச்சாளனாகி, வாலிய முன்னணித் தலைவனாகி, இயக்கத்தின் செயல் திறம் மிக்க செயலாளனாகி, களம் பல கண்ட தளபதியாகி, சிறை பல சென்று மீண்ட செம்மலாகி, உழைப்பால் உயர்ந்து உன்னதத் தலைவனாகிய அமிர் அவர்கள்; கருங்கொடி காட்டி செங்குருதி கொட்டிய காட்சியும், சிறீ எதிர்த்து சிறை சென்ற காட்சியும், பாதயாத்திரை மேற்கொண்ட காட்சியும், ஒப்பந்தங்கள் உருவாக உழைத்த காட்சியும், அறப்போர் ஆடிய காட்சியும், சொல் வன்மை காட்டிய காட்சியும், குடியரசு அரசியல் அமைப்பை எதிர்த்த காட்சியும், அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட காட்சியும், கூட்டணி மாநாடு கண்ட காட்சியும், தமிழ் ஈழம் கோரும் காட்சியும் வரலாற்று நூலிலே வளமாகத் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றன.



நாக. சாந்தலிங்கம்

புங்குடுதீவில் இன்று புதன்கிழமை மாலை இந் நூல் மிகச் சிறப்பாக வெளியிடப்படுகின்றது.

புலவர்

ஈழத்துச் சிவானந்தன்

Rio Jaffna
Phone: 7607
Daily 4 Shows
3rd DIAMOND WEEK
Peter Fonda.
DIAMOND
MERCENARIES

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன்
சுஜாதா - பத்மப்பிரியா
உறவுசொல்லஒருவன்

வெஸ்லி
(மானிப்பாய)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை
முடிப்பவன்
(புதிய - பிரதி கலர்)

REGAL Daily at 4-45, 7- & 9-30 p. m only.
Jaffna
James Bolam, Rodney Bewes
in
THE LIKELY LADS
(color)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
படித்தால் மட்டும் போதுமா
(புதியபிரதி)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) முத்துராமன்-சுஜாதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை. விஜயா
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) சிவாஜி - பத்மினி
(புத்தம் புதிய பிரதி) செந்தாமரை

சாந்தி யாழ்நகர். போன்: 7612
தினசரி 5 காட்சிகள்
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
Carry on up the Jungle
28-7-78 முதல் (comedy)
சினிமாஸ்கோப் தெய்வம் தந்த வீடு புதிய வெளியீடு

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஆனந்தன்
நானும் மனிதன்தான்!

லிடோ போன்: 7692
(யாழ்.நகர்) சிவகுமார், அல்கா
மதனமாளிகை

# பாரதத்தில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து குளத்தில் குளிக்க வார்த்து, கண்ணேய்க்கு மருந்திட்டு, ஆடைகள் சேகரித்து வழங்கி ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் சீரிய பண்பைத் தம்மிடையே அந்த ஐந்து ஆண்டுகளிலும் வளர்த்துக்கொண்ட அவர், சேரி அபிவிருத்திக்கென சினிமா நட்சத்திரங்களான என். எஸ். கிருஷ்ணன், வைஜயந்திமாலா, சிவாஜி, எம். ஜி. ஆர். போன்றோரை அழைத்து கலை நிகழ்ச்சிகளைக் கழகசார்பில் கல்லூரியில் நடாத்தி நிதி திரட்டி, சேரி ஒழிப்பு, ஏழைகள் கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் தொண்டாற்றி, கடமைஉணர்வைத் தம்மிடம் வளர்த்துக்கொண்டார். இவைதான் இன்றும் அவர் ஏழைகள்பால்கொண்ட அன்புக்கு அணிசெய்வன.

## பதவிகள் தேடிவந்தன

வி. பி. யின் சேவைமனப்பான்மை, அவரைத் தேடிப் பதவிகளை வரவைத்தது. அந்தக் கல்லூரியின் மாணவர் மன்றம், தமிழ்ப்பேரவை ஆகியவற்றின் தலைவராக உயர்ந்த இவர் பல அறிஞர்களையும் தமிழ்ப் பெரியார்களையும் அழைத்து அங்குள்ள மாணவர்களின் கருத்துக்கு விருந்து படைத்துக்கொண்டே இருந்தார். [illegible]

இருந்தாற்போல விமானம் ஒருதடவை குலுங்கியது, எதிர்பாராத குலுக்கம். நினைவுவானில் இருந்து உள்ளம் சற்று இறங்கியது. நினைவுகள் இப்போது சற்றுப் பிந்திய காலத்தை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. சோவியத்ரஷ்யாவுக்குத் தாம் செய்த ஏழு பிரயாணங்களும் அவர் மனத்தில் படிப்படியாகத் தோன்றின. இதயத்தில் மார்க்ஸ், ஏங்கல்ஸ், ஸ்டாலின், பிரஷ்னேவ் ஆகியோரின் உருவங்களும், அவர்தம் சீரிய பொதுவுடைமைத் தத்துவங்களும் நினைவுத்திரையில் விரிந்தன. கூட்டுறவுப் பயிற்சிக்கு தாம் சென்றுவந்த பல்கேரியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, இரு இனமக்கள் இணைந்துவாழும் செக்கோஸ்லவாக்கியா, போலந்து, சீனவில் தங்கிய ஒரு மாதகாலம், மாஸ்கோவில் உலக வாலிபர் மாநாட்டில் கலந்துகொண்டமை, இந்தியா ஊடாக ஆப்கானிஸ்தான், மொஸ்கோ ஆகியவற்றைக் கடந்து 'ரான்ஸ் சைபீரியன்' ரயில் மூலம் சீனவுக்கு பிரயாணம் செய்த நாட்கள், பீகிங்கில் சூ-என்-லாய் அவர்களைச் சந்தித்தமை, ஹொங்கொங், சைகோன், சிங்கப்பூர், கோலாலம்பூர் ஆகிய இடங்களைப் பார்த்து ரசித்தநினைவுகள், வெவ்வேறு மரங்களைச் சந்தித்து அளவளாவிய இன்பநினைவுகள். எல்லாம் படிப்படியாக அவரது உள்ளத்தே மெல்ல மெல்லத் தோன்றி மறைந்தன.


மேற்கு வானத்தில் சூரியன் சிவந்து தகதகக்கும் காட்சி விமான ஜன்னலூடாக வந்து இவரது நினைவுத் திரையைக் கிழித்தது. வானம் செந்நிறமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது, செவ்வொளி பட்டு அனைத்துமே செந்நிறத்தைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. 'ஓ... உலகில் படும் இறுதி ஒளி செவ்வொளி தானே. அதுபோல் என்றே ஒரு நாள் உலகில் செங்கொடியின் கீழ் ஒரு பொதுவுடைமைச் சமுதாயம் தோன்றும் என்ற தத்துவத்தையா இந்தச் செந்நிறவானம், செந்நிறப் பூமி தெளிவு படுத்துகிறது.'' இவ்வாறு தான் வி. பி. அப்போது சிந்தித்திருப்பார். அவரது உள்ளம்தான் எந்நேரமும் ஒரு பொதுவுடைமைபற்றிய-- செங்கொடி பற்றிய-- மாமேதை மார்க்ஸ், லெனின்பற்றிய-- மக்களின் உன்னத வறுமையில்லா சமத்துவ வாழ்வு பற்றிய-- சிந்தனையில் மூழ்கியிருக்குமே.

என்றோ ஒருநாள் கட்டாயம் அமையப் போகும் சோஷலிச, பொதுவுடைமைச் சமுதாயத்தின் ஒளியைத் தூரதிருஷ்டியில் கண்டு, அதனை அமைக்கும் பாதையில் வீரநடைபோடும் அவருக்கு இத்தகைய உயர்ந்த சிந்தனைகள் ஏற்பட்டதில் வியப்பில்லை.

விமானம் மெதுவாகத் தாழப் பறக்கத்தொடங்கியது. இந்திய மண்ணின் பசுமை நிறைந்த காட்சிகளும் விண்ணைத் துளைப்பது போலக் கம்பீரமாகக் காட்சிதரும் ஆலய கோபுரங்களும், ஆங்காங்கே காணப்படும் சிறுசிறு குன்றுகளும், வளைந்து வளைந்து செல்லும் சிற்றாறுகளும் விமானத்தின் யன்னலூடாக மனதில் ஒரு ரம்மியத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தன.

சிறு குழந்தையைத் தாய் முத்தமிடுவதுபோல மெதுவாக விமானத்தின் சக்கரங்கள் பாரத புண்ணிய பூமியில் பதிந்து 'விர்'ரென்று சிறிது தூரம் ஓடி நிற்கிறது.

(தொடரும்)



வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான் ஆலயத்தில் தொழிலதிபர் புதிய வெளியீடாக ''தட்சணாமூர்த்தி தத்துவமும், தோத்திரமும்'' நூலை வெளியிட்டபின் அடியார்களுக்கு அன்பளிப்புச் செய்கின்றார்.

## பரு. பஸ் சேவை

(நெல்லியடி)

பருத்தித்துறைத் இ.போ.ச. டிப்போவினுல் தற்போது 40க்கு மேற்பட்ட பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன, கடந்த சில மாதங்களின் முன்பு 33,35பஸ் வண்டிகளே சேவையில் ஈடுபட்டுவந்தன.

சேவையில் ஈடுபடுத்தப்படமுடியாத நிலையிலுள்ள ஐந்து பஸ் வண்டிகளைத் திருத்தியமைத்து சேவையில் விரைவில் ஈடுபடுத்த பொறியியல் அதிகாரி திரு. எஸ். பாலேந்திராவும் பொறியியல் பகுதி ஊழியர்களும் முயற்சி செய்து வருகின்றார்கள்.

(உ)

## ''தரமுயர்ந்து பெருமை பெருகவேண்டும்''

(யாழ்ப்பாணம்)

''ஏழாலை மிகச்சிறந்த கல்விமான்களையும், சமயப் பெரியார்களையும் நாட்டுக்கு அளித்துள்ளது, எனவே இம் மகாவித்தியாலயத்தின் தரம் மேலும் கூடிப் பெருமை காண வேண்டும்.''

இவ்வாறு வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் ஏழாலை மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

அதிபர் திரு. சு. இராஜசண்முகரத்தினம் தலைமை வகித்தார்.

திருமதி ஞா. மாணிக்கவாசகர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

[உ]

## 2 சைக்கிள்கள் மீட்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக ஒரு மாதத்துக்கு முன்னர் காணாமற்போன இரண்டு சைக்கிள்கள், நேற்று முன்தினமிரவு மீட்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு நேரத்தில், ஆஸ்பத்திரி வீதி வழியாக இரண்டு சைக்கிள்களில் வந்துகொண்டிருந்த இருவரை, ரோந்து சுற்றி வந்த பொலிசார் தடுத்து நிறுத்தினர். விசாரணையின் போது பொலிசாருக்கு சந்தேகம் ஏற்படவே இருவரையும் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று மேலும் விசாரணை நடத்தினர்.

அப்பொழுதுதான் விஷயமே அம்பலமாயிற்று!

அவர்களிருவரும் வந்த இரண்டு சைக்கிள்களும் ஒரு மாதத்துக்குமுன்னர் ஆஸ்பத்திரிக்கு முன்பாகத் திருடப்பட்டவை என்பதை இருவரும் ஒப்புக்கொண்டனர்.

சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டு, ஆர். விஜயரத்தினம், கி. ராஜரத்தினம் ஆகிய இருசந்தேகநபர்களும் காவலில் வைக்கப்பட்டனர்.



## பேரிழப்பு

மானிப்பாய் பட்டணசபையின் முன்னாள் தலைவரும், அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான அமரர் பொ. சின்னத்துரை முதலியாரின் நினைவுதினம் இன்றாகும். 1916ம் ஆண்டு மலேசியாவிற்குச் சென்று, ஆங்கில உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய பின் 1930ம் ஆண்டு நாடு திரும்பிய இவர், அரசியல், சமூக சேவையில் ஈடுபட்டார். 1938ல் மானிப்பாய் கிராம சபையின் கட்டுடை வட்டாரத்திற்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். 1942ம் ஆண்டுவரை யாழ்ப்பாணச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகக் கடமையாற்றினார்.

இலங்கைத் தமிழர் நிலைமை பற்றி அதே காலத்தில் கொலோனியல் செயலாளருக்கு மனுவொன்றை லண்டனுக்கு அனுப்பிவைத்தார். டொனமூர் ஆணைக்குழுவிற்கும் தமது கருத்துக்களைச் சமர்ப்பித்தார்.

இலங்கைத் தமிழருக்கு ஒரு அரசியல்கட்சி அவசியமென்று உணர்ந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை ஸ்தாபிப்பதில் ஒத்துழைத்தார். இறுதிவரை தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினராக இருந்து கடமையாற்றினார்.

1950ம் ஆண்டு மானிப்பாய் வரியிறுப்பாளர் சங்கத்தை உருவாக்கினார். 1953ம்ஆண்டு ஜனவரி 12ந் தேதி மானிப்பாய் பட்டணசபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

யோகர் சுவாமிகளின் மாணாக்கனான இவர், பல சைவ சபைகளிலிருந்து சமயத்தை வளர்த்துள்ளார்.

அரசியல்வாதியும், சிறந்த சமூகத் தொண்டருமான இவரின் மறைவு, தமிழ்மக்களுக்குப் பேரிழப்பாகும்.

--யோகி

# யாழ். பஸ்நிலையத்தில் நேற்று--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் திரு. கே. அமரசிங்கம் நண்பகல் ஒரு மணியளவில் வந்துசேர்ந்தார். யாழ்ப்பாணப்பகுதிக் கட்டுப்பாட்டதிகாரி திரு. என். தியாகராசா, மற்றும் இ. போ. ச. உத்தியோகத்தர்கள் பஸ் ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

## ஊழியர் கோரிக்கை

சம்பந்தப்பட்ட பொலிஸ்காரரை தற்காலிக வேலைநீக்கம் செய்தால், வேலைக்குத் திரும்புவோம் என ஊழியர்கள் ஏகோபித்துத் தெரிவித்தனர். இதனுல் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இதைத்தொடர்ந்து பிற்பகல் 1-30 மணியளவில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராஜா, தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. ஒருளி குணசேகரா, போக்குவரத்துப் பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. கே. சேனதிராசா ஆகியோர் வந்து பஸ் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேசினர்கள்.

இன்ஸ்பெக்டர் சேனதிராசா சம்பந்தப்பட்ட சாரதியின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தார்.

## "வேலைநீக்கம் செய்யவேண்டும்"

சம்பந்தப்பட்ட பொலிஸ்காரரை உடனடியாக தற்காலிக வேலைநீக்கம் செய்யுமாறு பஸ் ஊழியர்கள் கூறினர்கள். இதற்கு பதிலளித்த ஏ. எஸ். பி. ஆனந்தராஜா விசாரணை நடத்தி அவர் மீதுள்ள குற்றத்திற்கு சாட்சியங்கள் இருந்தால் தற்காலிக வேலைநீக்கம் செய்வதாக உறுதியளித்தார்.

இ. போ. ச. வில் குற்றம் செய்தால் முதலில் தற்காலிக வேலைநீக்கம் செய்தபின்தான் விசாரணை நடத்துவது வழக்கமென்றும், அதேபோல் இந்தப் பொலிஸ்காரரையும் உடன் தற்காலிக வேலைநீக்கம் செய்தபின்னர் விசாரணை நடத்துமாறு ஊழியாகள் கூறினர்கள்.

''உலகின் வேறுநாடுகளில் குற்றம்செய்தவுடன் விசாரணையின்றி கை காலை வெட்டுவார்கள். ஆனுல் இது ஜனநாயக நாடு விசாரணை நடத்தித்தான் முடிவுசெய்யவேண்டும்'' என்று ஏ. எஸ். பி. திரு. ஆனந்தராஜா கூறினர்.

## "மன்னிப்பு கேட்கட்டும்"

அப்படியானுல் சம்பந்தப்பட்ட பொலிஸ்காரரர் வந்து சாரதியை பகிரங்கமாக மன்னிப்புக்கேட்டால் வேலைக்குத் திரும்புவோம்'' என்று பஸ் ஊழியர்கள் கூறினர்கள்.

விசாரணை நடைபெறுதாகவும், 2மணிநேரத்தில் முடிவை அறிவிப்பதாகவும் ஏ. எஸ். பி. தெரிவித்தார்.

''நானே முன்னின்று இந்த விசாரணையை நடத்துவேன். குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் அவர் கூறினர்.

பஸ்-கார் விபத்துத் தொடர்பான விசாரணையை, இன்ஸ்பெக்டர் சேனதிராசாவே நேரடியாக நடத்த ஏற்பாடு செய்வதாகவும் அவர் உறுதியளித்தார்.

''இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடந்துவிட்டது. இனியும் ஏமாறமாட்டோம்'' என்று ஊழியர்கள் கூறினர்.

## 6 மாதங்களில் ஏதுவும் நிகழ்ந்ததா?

''கடந்த 6 மாதகாலத்தில் என்ன சம்பவம் நடந்ததெனக் கூறமுடியுமா?'' என்று ஏ. எஸ். பி. கேட்டார்.

புல்லுக்குளத்திற்குள், பாஸ் வைத்திருந்த கண்டக்டர் அமுக்கப்பட்டதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று ஊழியர் ஒருவர் கேட்டார்.

''அது கலவரகாலத்தில் நடந்தது. கடந்த 6 மாதத்தில் ஏதாவது நடந்ததா?'' என-ஏ. எஸ். பி.கேட்டார்,

''அது கலவரகாலத்தில் நடக்கவில்லை. கலவரத்திற்கு முன்பு நடந்தது'' என்று கண்டக்டர் ஒருவர் கூறினர்.

இடையே குறுக்கிட்ட மற்ருெரு பஸ் ஊழியர், சில தினங்களுக்குமுன், தான் காரியாலத்திலிருந்து, பஸ் சாரதியிடம் ஒரு துண்டு கொடுக்கப் போனபோது, மோட்டார் சைக்கிளில் பின்னுக்கு இருந்து வந்த பொலிஸ்காரரர் இருவர் காலால் உதைத்ததாக தெரிவித்தார்.

''இதுபற்றி ஏன் பொலிசில் புகார் செய்யவில்லை?''- என்று ஏ. எஸ். பி. கேட்டார்.

மோட்டார் சைக்கிளில் முன்னுக்கு இருந்த பொலிஸ்காரர் என் முதுகில் தடவி, சமாதானப்படுத்தி விட்டார் என்றும், அதனுல் தான் புகார் செய்யவில்லையென்றும் கூறினர்.

## எதிரொலித்த கோஷம்

பிரயாணிகளில் எத்தனையோ பேர் பெண்கள், மாணவிகள், வீடுசெல்ல முடியாமல் தவிக்கிறர்கள். அவர்களுக்காக வேலைநிறுத்தத்தை கைவிடுங்கள் என்று ஏ. எஸ். பி. கூறிய போது, வெளியில் நின்ற பிரயாணிகள், ''வேலைநிறுத்தத்தை கைவிடவேண்டாம் நாங்கள் நடந்துசெல்வோம்'' என்று கோஷமெழுப்பினர்கள்.

''முதலில் நடவடிக்கை எடுங்கள்'' என்று பலத்த கோஷமிட்ட இளைஞர் ஒருவரை, பொலிசார் பஸ் காரியாலயத்திற்குள் அழைத்துச் சென்றபோது, வெளியில் நின்ற பஸ் ஊழியரும் மாணவரும், ''அவரை வெளியில் விடுங்கள்'' என்று கூக்குரலிட்டனர். சிறிதுநேரத்தில் அவரை வெளியில்விட்டதும் அங்கு நின்றவர்கள் பலத்த கோஷமிட்டனர்,

## பொலிஸ்அதிபர் வந்தார்

சுமார் 2 மணியளவில் பொலிஸ்அதிபர் திரு.எகொடபிட்டியா வந்து ஊழியர்களை சந்தித்துப் பேசினர். பொலிஸ் அதிபரிடமும், ஊழியர்கள் அதே கோரிக்கையை முன்வைத்தார்கள்.

வாக்குமூலங்களை பதிவுசெய்து, குற்றம்காணப்பட்டால் நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் அதிபர் கூறினர். ஆனுல் பஸ் ஊழியர் வேலைக்கு திரும்பாமல் அவ்விடத்திலேயே நின்றனர்.

யாழ். வளாக மாணவர்கள் சிலர் சமரச முயற்சி ஏற்படுத்த எடுத்த முயற்சியும் பயனளிக்கவில்லை. சிறிதுநேரத்தில் பொலிஸ் அதிபரும், உதவி பொலிஸ் அதிபரும், திரு, கே. அமரசிங்கமும் சென்றுவிட்டனர்.

## பொலிஸ்நிலையம் சென்றனர்

சம்பந்தப்பட்ட சாரதியை பொலிஸ்நிலையத்திற்கு அனுப்புமாறும் மற்றும் சாட்சிகளையும் அனுப்புமாறும் பொலிசார் கூறிச் சென்றனர். ஆனுல் சாரதியை தனியாக பொலிஸ்நிலையம் அனுப்ப மற்றும் ஊழியர்கள் மறுத்துவிட்டனர். கடைசியில் மற்ருெரு இ. போ. ச. உத்தியோகத்தருடன் சாரதியும் சாட்சிகளும் பொலிஸ்நிலையம் சென்றனர்.

பஸ்நிலையத்தில் பதட்டநிலை காணப்பட்டது. பிரயாணிகளும் மாணவிகளும் செய்வதறியாது நின்றனர்.

## அரசாங்க அதிபர் வந்தார்

சுமார் 2-30 மணியளவில் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னுண்டோ அங்கு வந்துசேர்ந்தார். பஸ் ஊழியர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

## வேலைக்குத் திரும்புங்கள்

அரசாங்க அதிபர் கூறியதாவது; ''நீங்கள் வேலைநிறுத்தம் செய்வதால் பொலிசாருக்கு எவ்வித கஷ்டமும் ஏற்படப்போவதில்லை. பொதுமக்கள் தான் உங்கள் தாய்மார்கள் சகோதரிகள்தான், பிரயாணம்செய்யமுடியாமல் கஷ்டப்படப்போகிறர்கள். எனக்கும் கஷ்டம் இராது. நான் கச்சேரி ஊழியரை 3 மணிக்கு போகும்படி கூறிவிடலாம். ஆதலால் பொதுமக்களுக்காக வேலைக்கு செல்லுங்கள். சம்பவம் பற்றி கேள்விப்பட்டதும் கச்சேரி கடமைகளையும் விட்டுவிட்டு இங்கு வந்தேன். பொலிஸ் அதிபரையும் சந்தித்தேன். விசாரணை முடிந்ததும் சம்பந்தப்பட்ட பொலிஸ்மீது குற்றமிருந்தால் நடிவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கிறேன். நீதி நிலைநாட்டப்படும்.''

## பிரயாணிகள் கோஷம்

''நாங்கள் நடந்து போவோம்'' பொலிஸ்காரரர் மீது முதலில் நடவடிக்கை எடுங்கள்'' என்று வெளியில் நின்ற பிரயாணிகள் கோஷமிட்டனர்.

கவிஞர் க. மகேஸ்வரன் என்பவர் ''முதலில் நடவடிக்கை எடுங்கள் அதன்பின் பஸ் ஓடட்டும்'' என்று அரசாங்க அதிபரிடம் கூறினர்.

தென் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. சி. எம். எஸ். நாதன் சுமார் 3 மணி நேரம் பிரயாணிகளும், மாணவிகளும் பஸ்ஸிற்காகக் காத்திருப்பதாகவும் வேலைநிறுத்தத்தை சுமுகமாகத் தீர்க்குமாறு அரசாங்க அதிபரிடம் தெரிவித்தார்,

## எஸ். பியுடன் தொடர்பு

அரசாங்க அதிபர் இ, போ. ச. காரியாலயத்திலிருந்து பொலிஸ் அதிபருடன் நிலைமை பற்றி டெலிபோனில் கதைத்தார். அதன்பின் சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர் பொலிஸ்நிலையத்திற்கு வெளியிலும்சரி, உள்ளேயும்சரி கடமைக்கு அனுப்பப்படமாட்டாரென்றும், விசாரணை முடிவில் குற்றத்திற்குப் போதிய சாட்சியமிருந்தால் இடமாற்றத்துடனும், தற்காலிக வேலைநீக்கம் செய்யப்படுவார் என்றும் அரசாங்க அதிபர் உறுதியளித்தார்.

''பொலிஸ்காரரர் உடனடியாகத் தற்காலிக வேலைநீக்கஞ் செய்யப்படவேண்டும்'' என்று ஊழியர்கள் பலத்த கோஷமிட்டனர்.

''என் முடிவைத் தெரிவித்துவிட்டேன், பொதுமக்கள் நன்மை கருதி வேலைக்குத் திரும்புங்கள்'' எனக் கூறிய பின் அவருடன் வந்த கச்சேரி உத்தியோகத்தர்களும் சென்றுவிட்டனர்.

இதன் பின்னர் காரியாலத்திலிருந்து ஒலிபெருக்கி மூலம் பஸ்கள் புறப்படப்போவதாகவும், பிரயாணிகள், தங்கள் 'கியூ'வில் நிற்குமாறும் அறிவித்தனர். பிரயாணிகள் சிலர் கியூவில் போய் நின்றதும், பஸ் ஊழியர்கள் ஒவ்வொரு கியூவிலும் சென்று ''பஸ் இப்ப ஓடாது. நேரகாலத்துடன் வீட்டுக்குப் போய்ச் சேருகள்'' என்றுர்கள்.

## ரயிலிலும் காரிலும்

கனகம்புளியடி பஸ்ஸில் செல்லவந்த மாணவிகள் பஸ் சேவை இல்லையென்பதை அறிந்து புகையிரதநிலையம் நோக்கிச் சென்றனர். மற்றும் சில மாணவிகளும் பெண்களும் வான்களில் சென்றனர். கச்சேரி உத்தியோகத்தர்கள் டாக்சிகளில் சென்றனர். ஆஸ்பத்திரி வீதியில் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் காத்துநின்றனர். தீவுப்பகுதிக்குச் செல்லவேண்டிய மாணவிகள் பஸ்நிலையத்திலேயே நின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து வந்த இரண்டு பஸ்கள், ஆஸ்பத்திரி வீதிச் சந்தியிலேயே திரும்பிச் சென்றுவிட்டன. பஸ்நிலையத்திற்குள் வரவில்லை.

பஸ்நிலையத்தில் நேரம்செல்லச்செல்ல மாணவர் தொகை அதிகரித்தது, பஸ் ஊழியர்களும் அவ்விடத்லேயே நின்றனர்.

## பஸ்களைச் செலுத்த மறுத்தனர்

பிற்பகல் 4 மணிக்கு, காரியாலயத்திலிருந்து பஸ்நிலையத்தில் நிற்கும் பஸ்களைக் கோண்டாவில் டிப்போவுக்கு கொண்டுபோய் விடுமாறு ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது. ஆனுல் சாரதிகள் பஸ்களை எடுக்க மறுத்துவிட்டனர்.

பஸ்களை எடுக்க மாணவர்களும், பொதுமக்களும் விடமாட்டார்கள் என்று கூறினர்கள். விசாரணை முடிவை அறிந்த பின்னரே நாங்கள் முடிவுசெய்வோமென பஸ் ஊழியர் தெரிவித்தனர்.

இலங்கை பஸ் தொழிலாளர் கழகத் தலைவர் திரு. சுப்பிரமணியம் 4-30 மணியளவில் இங்கு வந்து இ. போ. ச. வடபிராந்தியத் தலைவர் திரு. கே. அமரசிங்கத்துடன் நிலைமை பற்றிப் பேசினர்.

5 மணியளவில் பருத்தித்துறைக்குச் செல்லும் பஸ்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து திரும்பிச் செல்வதாகவும், பருத்தித்துறைப் பிரயாணிகளை அவ்விடத்திற்குச் செல்லுமாறும் பஸ்நிலையக் காரியாலயத்திலிருந்து ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது. உடனே மாணவர்கள் பஸ்நிலையக் காரியாலயத்திற்குள் சென்று இ. போ. ச. வடபிராந்தியத்தலைவர் திரு. கே. அமரசிங்கத்துடன் கதைத்தார்கள்.

## மாணவர்கள் கேள்வி

''பஸ் ஊழியர்கள் சகலரும் வேலை நிறுத்தஞ்செய்யும் போது அவர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்த ஒலிபெருக்கியில் இப்படி அறிவிப்பது தவறு'' என்று மாணவர்கள் கூறினர்கள்.

''நாங்கள் நல்லூருக்குச் சென்று பருத்தித்துறை பஸ்களைப் போகவிடாமற்செய்தால் என்ன செய்வீர்கள்?'' என்று மாணவர்கள் கேட்டனர்.

திரு. அமரசிங்கம், அவர்களுடன் சில நிமிட நேரம் கதைத்துக் கொண்டிருந்தார்.

## இப்படியும் நடந்தது

இந்தநேரத்தில் பஸ் ஒன்று பிரயாணி ஒருவரால் 'ஸ்ராட்' செய்யப்படுவதாக கூறப்பட்டதைத் தொடர்ந்து பஸ் உத்தியோகத்தர்கள் அவ்விடத்திற்கு சென்றபோது பஸ் ஒன்று 'ஸ்ராட்' நிலையில் நின்றது. டிரைவரது ஆசனத்தில் எவரையும் காணவில்லை!

## பொலிஸ் ஜீப் வந்தன

மாலை 5 மணியாகியதும், பஸ்ஸிலிருந்த பிரயாணிகள் இறங்கிவிட்டனர். பொலிசார் 'ஜீப்' வண்டிகளில் பஸ் நிலையத்தை சுற்றி நின்றனர்.

சில 'ஜீப்'கள் பஸ்நிலையத்தை சுற்றி ரோந்துசுற்றிக் கொண்டிருந்தன.

பாடசாலை பஸ்கள் எதுவும் ஓடவில்லை. இதனுல், மாணவிகள் பாடசாலையில் 5 மணிவரை நின்றனர். சில கல்லூரி அதிபர்கள் தனிப்பட்ட பஸ்களை ஏற்பாடுசெய்து மாணவிகளை வீடுகளுக்கு அனுப்பி வைத்தனர். புகையிரதநிலையத்திலும் ஏராளமான பிரயாணிகள் நின்றனர். தனிப்பட்ட கார்களிலும் பலர் சென்றனர், (க)

## சுவீப்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 14 W 0079 | 14 W 0107 |
| 16 W 0292 | 24 W 0928 |
| 32 W 0883 | 39 W 0103 |
| 54 W 0043 | 55 W 0957 |
| 02 X 0761 | 11 X 0069 |
| 24 X 0269 | 47 X 0887 |
| 12 Y 0955 | 15 Y 0964 |
| 18 Y 0982 | 24 Y 0180 |
| 30 Y 0861 | 34 Y 0503 |
| 56 Y 0119 | 27 Z 0119 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

## உல்லாசப் பயணியிடம் கைவரிசை

(கொழும்பு)

கோட்டையில், இருந்த சுவிட்சர்லாந்து நாட்டு உல்லாசப்பிரயாணி ஒருவரிடம் இருந்து சமரா முதலான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. (உ)

......

## கத்தியால் குத்தி பணம் கொள்ளை

(எல்பிட்டியா)

எல்பிட்டியா வீதி ஒன்றில் வைத்து ஒருவரை கத்தியால் குத்திவிட்டு இனந்தெரியாத நால்வர் அவரிடமிருந்த 6000 ரூபா பணத்தை அபகரித்துச்சென்று விட்டதாக பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது. (உ)

OMAX
QUALITY WATCHES

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜுலை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - elegram: Ealanaadu - elephone: 389 - Registered as a News paper in Sri Lanka.